(6 pages) **Reg. No. : ....................................**

**Code No. : 4108** **Sub. Code : R 4 TA 31**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2010.

Third Semester

Tamil — Main

Paper III — Allied — பெண்ணியம்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ‘செனகா பால்ஸ்’ பெண்கள் மாநாடு நடந்த ஆண்டு

(அ) 1848 (ஆ) 1830

(இ) 1840 (ஈ) 1869.

2. தாராளவாதப் பெண்ணியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவர்

(அ) ஜான் ஸ்டூவர்ட் மில்

(ஆ) விர்ஜீனியா ஊல்ப்

(இ) மேரி வோல்ஸ்டன் கிராஃப்ட்

(ஈ) பெட்டிஃபிரைடன்.

3. அமெரிக்காவில் இரண்டாவது பெண்ணிய அலைக்குக் காரணமானவர்

(அ) கேட் மில்லட்

(ஆ) ஆனிகொய்ட்

(இ) பெட்டி ஃபிரைடன்

(ஈ) க்ளோரியா ஸ்டைனம்.

4. தந்தை வழிச் சமுதாயத்தை உடைத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்ட பெண்ணியம் எது?

(அ) சோசலிச வாதப் பெண்ணியம்

(ஆ) மார்க்சீயப் பெண்ணியம்

(இ) சூழல் பெண்ணியம்

(ஈ) தீவிரவாதப் பெண்ணியம்.

5. பண்டித ரமாபாயால் தோற்றுவிக்கப்பட்ட சீர்திருத்த அமைப்பு

(அ) ஆரிய மகிளா சமாஜம்

(ஆ) சாரதா சதன்

(இ) ஆர்ய சமாஜம்

(ஈ) சேவாசதன்.

6. சிவில் விவாகச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(அ) 1870 (ஆ) 1875

(இ) 1872 (ஈ) 1874.

7. பண்பாட்டுப் போர்வையை சங்கக் காலத்தில் கட்டுடைத்த பெண்பாற் புலவர்

(அ) நச்செள்ளையார் (ஆ) ஆதிமந்தி

(இ) ஔவையார் (ஈ) காக்கைப்பாடினியார்.

8. இராமயண தொன்மம் நவீனப் பார்வையில் மீட்டுருவாக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட சிறுகதை

(அ) வதம் (ஆ) வலி

(இ) புதிய ஏவாள் (ஈ) அந்தரங்கம்.

9. அமெரிக்காவின் தலைசிறந்த பெண்ணியத்திறனாய்வாளர்

(அ) கேட் மில்லட் (ஆ) எலைன் ஷோவால்டர்

(இ) மிரா ஜெலன் (ஈ) அட்ரைன் ரிச்.

10. தீவிரவாதப் பெண்ணியம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்

(அ) Radical Feminism

(ஆ) Revolutionary Feminism

(இ) Anarcha-Feminism

(ஈ) Socialist Feminism.



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) "மேரி வோல்ஸ்டன் கிராப்ட்" குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பெட்டி பிரைடன் பெண்ணியத்திற்கு ஆற்றிய பணியினை விவரி.

12. (அ) ஜான் ஸ்டூவர்ட் மில் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராகக் கொண்டிருந்த கருத்துக்களை விவரி.

(அல்லது)

(ஆ) தந்தை வழிச்சமூக அமைப்புக்கும் பெண்ணடிமைத் தனத்திற்குமுள்ள உறவினை வெளிப்படுத்துக.

13. (அ) கிறிஸ்தவ மதம் இந்தியாவில் பெண்ணிய எழுச்சியை எவ்வாறு தாண்டியது?

(அல்லது)

(ஆ) பெரியாரின் பெண் விடுதலைக் கருத்துக்களை விவரி.

14. (அ) பெண் எழுத்து என்றால் என்ன? விவரி.

(அல்லது)

(ஆ) அனுராதாவின் 'வலி' என்னும் சிறுகதையில் இராமயணச் சீதை எவ்வாறு மீட்டுருவமாக்கப்-பட்டுள்ளாள்?

15. (அ) "இல்லாள்" என அழைக்கப்படும் பெண், இல்லத்தின் எல்லா இடங்களுக்கும் உரியவள் அல்லள் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) "அந்தரங்கம் – பகிரங்கம்" என்பது பெண்ணெழுத்துக்களில் வெளிப்படுவதை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

16. (அ) ஓட்டுரிமைக்காக பெண்கள் இயக்கங்களும், தனி நபர்களும் மேற்கொண்ட முயற்சிகளை விவரி.

(அல்லது)

(ஆ) சமதர்மப் பெண்ணியக் கொள்கைகளை விவரிக்க.

17. (அ) ஜான் ஸ்டூவர்ட் மில் பெண் விடுதலைக்கு ஆற்றிய பணி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பண்பாடு "பெண்ணடிமைத்தனத்தை ஊக்குவிக்கிறது" என்பதை நிறுவுக.



18. (அ) இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்கு உழைத்த சமூகச் சீர்திருத்த வாதிகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்கள் மேற்கொண்ட பெண் விடுதலைப் போராட்டங்கள் சமூக நலத்திற்கான போராட்டங்களாக வளர்ந்தமை குறித்து எழுதுக.

19. (அ) தமிழில் இலக்கியத்தில் பெண் எழுத்தின் செல்வாக்கினை ஆய்க.

(அல்லது)

(ஆ) "பெண்களின் இயங்கு தளம்" என்னும் பொருள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. (அ) பின் நவீனத்துவத்துவத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விவரி.

(அல்லது)

(ஆ) "பெண்ணிய இலக்கியத் திறனாய்வு" என்பதை விளக்குக.

———————